1987 நவம்பர் 13]

மனையில் 1,693 நபர்களும் கண் தானம் செய்வதற்கு பதிவு செய்துள்ளனர். இவற்றினைத் தவிர அரிமா சங்கத்தினரால் சென்னை அரசு கண் மருத்துவ மனையில் நடத்தப்பெறும் கண் வங்கி மூலம் 2,818 பேர் கண் தானம் செய்யப் பதிவு செய்து உள்ளனர்.

(ஆ) (1) அரசு கண் மருத்துவமனை, சென்னை-8.

(2) அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை.

(3) சங்கர நேத்ராலயா, சென்னை.

(4) சோர்டியா மருத்துவமனை, சென்னை.

(5) அகர்வால் கண் ஆராய்ச்சி நிலையம், சென்னை.

(6) அரவிந்தர் கண் மருத்துவமனை, மதுரை.

தனியார் மருத்துவமனை தொடங்க நிபந்தனைகள்.

97—(*வினா எண் 6121)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்ரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தனியார்கள் மருத்துவமனை தொடங்கும்போது அரசு விதிக்கும் நிபந்தனைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தற்போது தனியார் மருத்துவமனைகள் அமைப்பதை கண்காணிப்பதுபற்றி எந்த ஒரு சட்டதிட்டமோ கட்டுப்பாடோ இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனை என்பது, பெரிய அளவிலே இன்று தமிழ்நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் இருக்கிறது. அங்கே முறையாக செவிலியர் பயிற்சிக்குப் படிக்காதவர்களை எல்லாம் நர்சுகள் என்று வைத்துக் கொள்கிறார்கள். அதேபோல் மருந்தாளர்— பார்மசிஸ்ட் பயிற்சிக்குப் படிக்காதவர்களை எல்லாம் மருந்தாளர்களாக வைத்துக் கொள்கிறார்கள். சாதாரணமாக ஒரு ஆயிரம் ரூபாய் மூலதனத்திலே கடை வைப்பது என்றால்கூட, லைசென்சு வாங்குகிற முறை இருக்கிறது. அதுபோல, படுக்கை வசதிகள் கூட, ஒரே அறையில் 10 நோயாளிகளைப் போடுகிற வழக்கத்தைக்கூட பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் இன்றைக்கு வைத்திருக்கிறார்கள். எனவே, அவற்

றில் எல்லாம் படித்தவர்களைத்தான் மருந்தாளர்களாகப் போட வேண்டும், முறையாகப் பயிற்சி பெற்றவர்களைத்தான் செவிலியர்களாகப் போட வேண்டும் என்று கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு தனியார் மருத்துவ மனைகளை முறைப்படுத்துவதற்குச் சட்டம் கொண்டு வர மாநில அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவ மனைகளில் இது போன்ற குறைகளும், இன்னும் வேறு பல குறைபாடுகளும் நிறைய இருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் சட்டம் கொண்டு வருவதாக இருக்கிறோம். அப்போது இதைப் பற்றி விரிவாகப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போலவே, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை அளித்தாலும்கூட, பெரும்பான்மையான மக்கள் பணம் கொடுத்துக்கூட சிகிச்சை பெறுவதற்குத் தயாராகச் செல்கிறார்களே, அப்படிப் போகிறபோது, தனியார் மருத்துவமனைகளில் மிகக் கூடுதலாக—முனிசிபல் நகரங்களில் இருக்கிற மருத்துவமனைகளில் கூட—சாதாரண சிகிச்சைக்குக் கூட ரூபாய் 5,000 ரூபாய் 10,000 என்று போடுகிற சூழ்நிலையிருக்கிறது. எனவே, டாக்டர்கள் வாங்குகிற கட்டணத்தை முறைப்படுத்துவதற்கும் அந்தச் சட்டத்தில் வழிவகை காணப்படுமா? அதைப் போல, மாநில அரசே, தமிழ்நாடு ஹாஸ்பிடல் கார்ப்பரேஷன் ஒன்று ஆரம்பித்து கட்டணம் வாங்கிக் கொண்டு, சிகிச்சை அளிக்கிற மருத்துவமனைகளை முக்கியமான இடங்களில் உருவாக்க பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் என்னென்ன இருக்கவேண்டும், எப்படி, எப்படி நடத்தவேண்டும் என்றுதான் விதிகள் வகுக்கலாமே தவிர, மருத்துவர்கள் எவ்வளவு பணம் வாங்கலாம் என்று நிர்ணயிக்க முடியாது. நிர்ணயிக்கக்கூடியதும் அல்ல. அதிகமாகப் பணம் வாங்கினால் அதைப்பற்றி வருமான வரி இலாகா கவனித்துக்கொள்ளவேண்டுமே தவிர, நாம் அதில் தலையிடுவதற்கு இல்லை. மாநில அரசாங்கம், மருத்துவத்தைப் பொறுத்தவரையில், மக்களுக்கு இலவசமாக வழங்குவதைத்தான் குறிக்கோளாக வைத்திருக்கிறோம். வசதி படைத்தவர்களிடத்தில் கட்டணம் வாங்குகிறோமே தவிர, வசதியற்ற ஏழைகளிடத்தில் இலவசமாக வைத்தியம் செய்வதுதான் அரசின் குறிக்கோள். அதிலேயிருந்து அரசு வேறு மாற்றத்திற்குப் போவதாக இல்லை.